## NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **GAB Sponsors English Language Course** |
| Publication : | **Malaysia Nanban** |
| Section : | **General News** |
| Page : | **14** |
| Date : | **21 November 2011** |

# ஜிஏபி ஆதரவில் ஆங்கிலத் திறன் பயிற்சி

*(சிவா)*

தஞ்சோங் மாலிம், நவ.21– தாய் மொழி, தேசிய மொழியோடு உலக மொழியான ஆங்கிலத்திலும் மலேசிய மாணவர்களின் ஆளுமை மெய்பிக்கப்பட வேண்டும். அதில் அவர்கள் கூடுதல் கவனமும் செலுத்திட வேண்டும் என ஜிஏபி (GAB) அறக்கட்டளையின் இயக்குநர் டான்ஸ்ரீ சோ உவாட் லாய் வலியுறுத்தினார்.

இடபில்யு ஆர்எப் (EWRF) கல்வி அறவாரியத்தின் ஏற்பாட்டில் ஓராண்டுகாலம் நடைபெறும் தமிழ் பள்ளி மாணவர்களுக்கான ஆங்கில திறன் பயிற்சியின் நிறைவு விழாவில் டான்ஸ்ரீ சோ மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்களின் முன்னிலையில் இதனை குறிப்பிட்டார். மேலும், ஜிஏபி வழி தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கு அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உதவுவது பெரும் மகிழ்ச்சிகரமானது எனவும் ஒப்பித்தார்.

இந்த ஓராண்டு காலத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இப்பயிற்சியில் அம்மாணவர்களிடையே ஆங்கில மொழி ஆற்றல் அதிகரித்திருப்பதை நினைவு கூர்ந்த அவர் தோட்டப் புறம், ஏழ்மை நிலை மாணவர்களும் ஆங்கிலத்தில் தத்தம் ஆளுமையை வளர்த்தெடுக்க இப்பயிற்சி ஓர் தளமாக விளங்குவதாகவும் கூறினார்.

இதற்கு முன்னதாக இந்நிகழ்வில் உரையாற்றிய இடபில்யுஆர் எப் தஞ்சோங் மாலிம் வட்டார தலைவர் கோவிந்தசாமி வியாபாரம், அறிவியல் உட்பட உலக மொழியாக ஆளுமை செலுத்தி வரும் ஆங்கிலத்தில் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் ஆளுமை அதிகரிக்க வேண்டும் என்றார். மேலும் தூர நோக்கோடு நடத்தப்படும் இவ்வகையான ஆங்கில பயிற்சி முகாமிற்கு ஜிஏபி போன்ற அறக்கட்டளையின் பெரும் உதவி போற்றுவதற்குரியது எனவும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெற்ற ஆங்கில வகுப்பில் இம்முறை தஞ்சோங் மாலிம் டான்ஸ்ரீ மாணிக்க வாசகம், தாமான் பெர்மாத்தா தமிழ்ப்பள்ளி, புத்துமலை தமிழ்ப் பள்ளி, பாங்கி தமிழ்ப்பள்ளி, செமிஞ்ஜே தோட்டத் தமிழ்ப் பள்ளி ஆகிய ஐந்து தமிழ்ப் பள்ளிகள் இப்பயிற்சியில் பங்கேற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதில் 200 மாணவர்கள் அடங்குவர். பயிற்சியின் நிறைவு நாளான நேற்றைய முன்தினம் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் திறனை வெளிப்படுத்திய வேளையில் அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.







